## விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கான ஆலோசனைப் பத்திரம்

**பொது ஆலோசனை :**

1. விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் நகல்களும், சமாதான நீதவான்/அங்கீகரிக்கப்பட்ட அரச அலுவலகரினால் அதிகாரப்பூர்வ முத்திரையுடன் உண்மையான பிரதிகள் என சான்றளிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

**2.** வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும் இரண்டு தனிப்பட்ட உத்தரவாதகாரர்கள் வழங்கக் கூடிய தொழில்முனைவோர் மட்டுமே இந்தக் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது இடம்பெறும் கஷ்டங்களை தவிர்க்க முடியும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**3**. விண்ணப்பப் படிவத்தின் இலக்கம்

- 01 தொடக்கம் 07 வரை விண்ணப்பத்தாரரினாலும்
- 8.1 தொழில்முனைவோர் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலகரினாலும்
- தேவையாயின் 8.2 உரிய பிரதேச செயலாளரினாலும் நிரப்பப்பட வேண்டும்.

**01. அடிப்படைத் தகவல்**

1.1 பெயர் **:** தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுப் பெயரை குறிப்பிடவும்.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : உண்மைப் பிரதியாக சான்றளிக்கப்பட்ட பிரதியை இணைக்கவும்.

1.7 தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி (இருந்தால்): செல்லுபடியாகும் முகவரியாக இருக்க வேண்டும்.

1.8 நிறுவனத்திற்குரிய மிக உயர்ந்த தொழில்முறை தகுதி (NVQ அல்லது பிற ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதிகள்): :

(உண்மையான பிரதியாக சான்றளிக்கப்பட்ட புகைப்படப் பிரதியை இணைக்கவும்))

**02. நிறுவனத்தைப் பற்றிய அடிப்படைத் தகவல்கள்**

2.1 நிறுவனத்தின் பெயர்: வணிகப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளபடி (வணிகப் பதிவுச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகலை இணைக்கவும்.)

2.3 நிறுவனத்தின் உரிமை : வணிகப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளபடி

2.4 ஒரு கூட்டு நிறுவனமாக இருந்தால், தேசிய அடையாள அட்டையில் உள்ள படி உரிமையாளர்களின் பெயர்கள்

(அடையாள அட்டைகளின் சான்றளிக்கப்பட்ட புகைப்படப் பிரதிகளை இணைக்கவும்.)

2.5 தொழில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம்:

a) கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

b) மேல் மாகாண வணிகப் பெயர்கள் பதிவுத் திணைக்களம்

c) மேல் மாகாண சபைக்குரிய திணைக்களம் அல்லது அதிகார சபை

d) தேசிய மீன்வள அபிவிருத்தி அதிகாரசபை

e) தொழிலுக்குரியதாக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய வேறு ஏதேனும் அரசு நிறுவனம் அல்லது பகுதி அரசு நிறுவனம்.

**03. நிறுவனத்தின் சுருக்கம்**

3.1 தொழிலுக்குரிய துறை: பின்வரும் துறைகளில் ஒன்றைக் குறிப்பிடவும்.

- விவசாயம் சார்ந்த உற்பத்தி அல்லது பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள்
- விலங்கு உற்பத்தி சார்ந்த பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள்
- அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் தொடர்புடைய தொழில்கள்
- சிறிய அளவிலான ஆடை சார்ந்த உற்பத்தி
- சிறிய அளவிலான தோல் சார்ந்த உற்பத்தி
- பாரம்பரிய கைத்தொழில் சார்ந்த உற்பத்தி
- உள்ளூர் மசாலா சார்ந்த பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தி
- **அலங்கார பொருட்கள் உற்பத்தி**
- சவர்க்காரம் மற்றும் கழுவும் பொருட்கள் உற்பத்தி
- சீமெந்து சார்ந்த உற்பத்தி
- ஆயுர்வேதம் சார்ந்த உற்பத்தி
- மென் கைத்தொழில்கள்
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தி
- உக்காத கழிவு மறுசுழற்சி சார்ந்த தொழில்கள்
- வாகன பழுதுபார்ப்பு சார்ந்த தொழில்கள்
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்ட உற்பத்தி தொழில்கள்
- கடன் முகாமைத்துவக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற உற்பத்தி நிறுவனங்கள்

3.2 தொழிலின் மூலம் வழங்கப்படும் தயாரிப்புகள் அல்லது சேவைகள்: உங்கள் அனைத்து தயாரிப்புகளையும் பட்டியலிடுங்கள். எடுத்துக்காட்டாக: நிறுவனத்திற்கு சொந்தமான துறை சிறிய அளவிலான தோல் சார்ந்த தயாரிப்புகளாக இருந்தால், தயாரிப்புகளை காலணிகள், பைகள் போன்றவையாகக் குறிப்பிடலாம்

3.3.1 உள்ளூர் விற்பனை / சேவைகள் வழங்கப்படும் பகுதிகள்: பிரதேச செயலகப் பிரிவு / மாவட்டமாக குறிக்கவும்

3.3.3 உற்பத்தி ஏற்றுமதியாளருக்கு விற்கப்படுகிறதா? பதில் "ஆம்" எனில், தொடர்புடைய ஏற்றுமதியாளரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடவும்.

3.4 தேசிய ரீதியில் கொள்முதல் செய்யப்பட்ட மூலப்பொருட்கள் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றனவா? ஆம் / இல்லை

மேலே பதில் "ஆம்" எனில், அந்த மூலப்பொருட்களைக் குறிப்பிடவும். நீங்கள் மாதாந்தம் பயன்படுத்தும் மூலப்பொருட்களின் அளவைக் குறிப்பிடவும்.

3.5.3 தொழில் முனைவோர் ஊழிய சேமலாப நிதியில் பதிவு செய்யப்பட்டுள்ளார் என்பதற்குரிய சான்றிதழ், உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.

**04.** தொழிலுக்காக செய்யப்பட்ட ஆரம்ப முதலீடு

| தொடரிலக்கம் | அடிப்படை முதலீடு | அளவு/ எண்ணிக்கை | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|
| I | காணி | பேர்ச்சஸ்/ றூட்/ஏக்கர்களில் குறிப்பிடவும். | |
| II | கட்டடங்கள் | சதுர அடி அல்லது சதுர மீட்டரில் குறிப்பிடவும். | |
| III | இயந்திரங்கள் / உபகரணங்கள் | ஒவ்வொரு இயந்திரத்தின் பெயரையும் அவற்றில் எத்தனை உள்ளன என்பதையும் குறிப்பிடவும்? | |

| | | | |
|---|---|---|---|
| IV | வாகனங்கள் (தொழிலுக்கு உரித்தானவை) | வாகனத்தின் வகையைக் குறிப்பிடவும் | |
| V | செயல்படும் மூலதனம் | | |
| VI | வேறு (குறிப்பிடவும்) | | |
| | மொத்தம் | | |

**05. 2026 ஆண்டின் ஜனவரி தொடக்கம் யூன் 30 வரையிலான 06 மாத மாதாந்த வருமானச் சுருக்கம்: உதாரணத்தினைப் போன்று தொழிலின் வருமான அறிக்கையை நிரப்பவும்**

| தொடரிலக்கம் | உற்பத்தி அல்லது சேவை | மாதாந்த உற்பத்தி/விற்பனை (அலகுகள்) (06 மாதத்திற்காக) | ஒரு அலகுக்கான விற்பனை விலை (ரூ.) (06 மாதத்திற்காக) | மொத்த வருமானம் (ரூ.) (06 மாதத்திற்காக) |
|---|---|---|---|---|
| I | குழந்தை ஆடைகள் | 3000 | 450.00 | 1,350,000.00 |
| II | குழந்தை காலணிகள் | 2400 | 300.00 | 720,000.00 |
| III | | | | |
| **மொத்தம்** | | | | 2,070,000.00 |

7.1 கட்டட நிர்மாணத்திற்காக விடுக்கப்படும் வேண்டுகோள் : தொழிலுக்குரிய உற்பத்தியை மேற்கொள்வதற்குத் தேவையான கட்டடங்களுக்காக மட்டும் கடன் வசதி வழங்கப்படும். கடன் விண்ணப்பத்துடன் மாதிரித் திட்டத்துடன் BOQ (Bill of Quantity) னை சமர்ப்பிக்கவும்.

7.2 **கடன் தேவை** தொடர்பான விபரம்

| **கடன் தேவை** | | **கொள்வனவு செய்ய முன்மொழியப்பட்டுள்ள இயந்திரம்/உபகரணத்தின் பெயர்** | **சந்தைப் பெறுமதி (ரூ.)** | **முன்மொழியப்பட்ட இயந்திரம் அல்லது உபகரணங்களின் விவரக்குறிப்புகள் (specifications)** |
|---|---|---|---|---|
| 1 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுசெய்தல் | உதா. உலர்த்தும் இயந்திரம | | சக்தி, தட்டின் அளவு, மின்னளுத்த அளவு,<br>ஒரே நேரத்தில் உலர்த்தக்கூடிய அளவு ( Kg) போன்றன |
| | | 1.1 | | |
| | | 1.2 | | |
| கடன் தேவை | | செலவு செய்ய முன்மொழியப்பட்டவை விடயம்/விடயங்கள் | ஒரு அலகின் விலை ரூ. | மொத்தப் பெறுமதி ரூ. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | கட்டடங்களை மேம்படுத்துதல் | உதா.ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கு | 20*30 | |
| | | | | |

7.7 மேலே குறிப்பிடப்பட்ட விடயம்/விடயங்களுக்கு நிதி வசதிகளைப் பெறுவதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் நிலை: உங்கள் தொழிலின் எதிர்கால இலக்குகளை இதன் கீழ் குறிப்பிடப்பட வேண்டும்.

| **தொடரிலக்கம்** | **உற்பத்தி வகை** | **எதிர்பார்க்கும் உற்பத்தி அலகின் அளவு(வருடாந்தம் )** | | |
|---|---|---|---|---|
| | | **2027** | **2028** | **2029** |
| | உதா : குழந்தை ஆடைகள் | குழந்தை ஆடைகளின் எண்ணிக்கை | | |
| | வாகனம் பழுதுபார்ப்புச் செய்தல் | (பழுதுபார்க்க இலக்காக கொள்ளப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை) | | |
| | I. | | | |

**08**.தொழில் முனைவோரின் வதிவிடத்தினைச் சான்றுப்படுத்தல் :
8.1 எல்லா விண்ணப்பதாரிகளினாலும் வதிவிடத்தினை உறுதி செய்ய வேண்டும்.
8.2 தொழில் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு மற்றும் வசிப்பிடம் ஒரே பிரதேச செயலாளர் பிரிவாகும் போது தொடர்ரிலக்கம் 8.2 இற்கு உரிய தகவல்களை நிரப்புவது அவசியமன்று